**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.6/2018**

PW- விஜயா (எ) விஜயலட்சுமி நாள். 25.09.2024

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 4ம் பிரதிவாதி சாந்தியின் நாத்தனார் என்றால் சரிதான். சாந்திக்கும், ஜெயபிரகாஷ்க்கும் நீதிமன்ற மூலமாக விவாகரத்து பெறவில்லை. ஊரில்வைத்து விவாகரத்து செய்தார்கள். ஊரில் வைத்து பஞ்சாயத்து செய்து விவாகரத்து செய்வது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ் என் அண்ணன். அவர் திருமணத்திற்கு முன்பு வெளிநாடு போய்இருந்தார். திருமணத்திற்கு பிறகு ஒருமுறை வெளிநாடு சென்றார். திருமணத்திற்கு பிறகு வெளிநாடு சென்று விட்டு எவ்வளவு காலம் கழித்து வந்தார் என்று எனக்கு ஞாபகமில்லை. வெளிநாட்டில் இருந்த காலத்தில் அவர் தனது மனைவிக்கு கடிதம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. திருமணம் ஆகி 3 மாதங்கள் ஆகி இருவரும் பிரிந்து விட்டார்கள் என்றும், இருவருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றும் நான் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் சாந்தியும் அவர் கணவரும் சேர்ந்து வாழவிடாமல் பிரச்சனை செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. வாதி ஜெயபிரதா 2ம் பிரதிவாதியின் சட்ட பூர்வமான மகள் என்றும், எனவே, அவருக்கு பாகஉரிமை உள்ளது என்றால் சரியல்ல. நான் சாந்தியை சண்டை போட்டு வெளியே அனுப்பி விட்டு வேறொரு பெண்ணை கூட்டிவந்து ஜெயபிரகாஷின் 2வது மனைவி என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாந்திக்கும் , ஜெயபிரகாஷ்கும் திருமண உறவு அமலில் உள்ளது போது தான் வாதி பிறந்தார் என்றும், எனவே, சட்டப்படியான வாரிசு என்றும், அவருக்கு பாகஉரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. சாந்தி அனுப்பயி பதில் அறிவிப்பில் வாதி சட்டப்படியான வாரிசு அல்ல கூறியுள்ளதாக நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜெயபிராகஷ்க்கும் அவர் 2வதாக திருமணம் செய்துள்ளதாக சொல்லும் பரிமளாவுக்கும் பிறந்த பிள்ளைகள் சட்டப்படியாக வாரிசுகள் அல்ல என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றால் சரியல்ல. 14.07.1999ல் எழுதப்பட்ட உயில் என் அப்பாவால் எழுதப்பட்டதல்ல என்றால் சரியல்ல. நானும் என் அம்மாவும் சேர்ந்து 5 உயில்கள் தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உயில்கள் அனைத்தும் நான் தயார் செய்து தாக்கல் செய்தது என்றால் சரியல்ல. 1987ல் எழுதப்பட்ட உயிலின் அசல் தாக்கல் செய்யவில்லை. 5 வது மற்றும் 7வது அயிட்ட சொத்து என் அப்பா சொத்து என்று சொல்லியுள்ளது சரிதான்.

30.11.1993ல் எழுதப்பட்ட உயில் நானும், என்அம்மாவும் சேர்ந்து தயார் செய்தது என்றால் சரியல்ல. 12.05.2004 ல் என் அப்பா , அம்மா சேர்ந்து பாலகிருஷ்ணனுக்கும், ராஜரத்தினத்திற்கும் எழுதி கொடுத்தது. என் அம்மா உயிரோடு இருந்ததால் அந்த உயில் அமலுக்கு வரவில்லை என்றால் சரியல்ல. அந்த உயிலை நீதிமன்றம் பரிசீலிக்க முடியாது என்றால் சரியல்ல. நான், என் அம்மா, 2வது மனைவி சேர்ந்து சாந்தியை வீட்டை விட்டு வெளியே அனுப்பி அவருக்கு துரோகம் செய்துவிட்டோம் என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ்க்கும் சாந்திக்கும் உள்ள திருமண உறவு ஜெயபிரகாஷ் இறக்கும் வரையில் அமலில் இருந்தது என்றால் சரியல்ல. ஜெயபிரகாஷ் இறப்பிற்கு சாந்தி வந்தார் என்றால் சரிதான். வழக்கை பணம் பறிப்பதற்காக வாதி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி மற்றும் 4ம் பிரதிவாதிக்கு உள்ள பங்கை நான் மறுக்கமுடியாது என்றால் சரியல்ல. 2வது மனைவியின் பிள்ளைகளை சேர்க்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Sd/–A.Balkis., B.L.,
Principal Distirct Judge,
Perambalur.